# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 60/2023 நாள்.26.02.2026

## DW4- திரு.கோவிந்தசாமி , த/பெ. திரு.பரமசிவம்

2ஆம் பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி

தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்றால் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது. 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் நான் கிரையம் பெற்ற தேதியில் சொத்து இருந்தது என்றால் பவர் வாங்கி வைத்திருந்தார்கள் நான் கிரையம் பெற்றேன். யார் சொத்தின் உரிமையாளர் என்றால் 4பேரும் பவர் வைத்திருந்தார்கள் அவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். 2ஆம் பிரதிவாதி முருகானந்தம் தாவா சொத்தின் உரிமையாளர் இல்லை என்று சொல்கிறார் என்றால் அவர் ஒனர் இல்லை என்றால் எப்படி பவர் இருக்கமுடியும். 1 முதல் 4பிரதிவாதிகளிடம் என்ன தேதியில் எவ்வளவு பணம் கொடுத்து கிரையம் பெற்றேன் என்றால் 22,53,000கொடுத்து 21.11.2017 இல் ஒப்பந்தம் போட்டேன், பதிவு செய்தது 8.1.2018, ஒவ்வொருவருக்கும் பிரித்து காசோலை கொடுத்தேன் அந்த தொகை 5,38,250 ஆகும். தாவா சொத்து மொத்தம் எத்தனை சதுரஅடி என்றால் 3000சதுரடி. தாவா சொத்து தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் முக்கியமான இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. கமலா சுப்ரமணியம் பள்ளிக்கு எதிரே தஞ்சாவூர் புதுகோட்டை சாலையில் உள்ள சொத்து என்றால் இல்லை. மெயின்ரோட்டிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் அளந்தால்தான் சொல்லமுடியும். சுமார் 100அடி மெயின்ரோட்டிலிருந்து தள்ளி இருக்குமா என்றால் இருக்காது. சுமார் எவ்வளவி தூரம் என்றால் அளந்துதான் சொல்லமுடியும். முருகானந்தத்திற்கு பணம் கொடுத்தது எத்தனை லட்சம் என்றால் 5,38,250 எந்ததேதியில் கொடுத்தேன் என்றால் 8.1.2018. 5.1.2018 தனிதனியாக ஒருவருக்கும் காசோலை கொடுத்ததாக பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் காசோலை 5.1.2018 தயார் செய்யபட்டது 8.1.2018 கிரையத்தின்போது கொடுத்தேன். 8.1.2018 காசோலை மூலம் 2ஆம் பிரதிவாதிக்கு கொடுக்கபட்ட தொகையை நான் அவரிடமிருந்து பெற்றுகொண்டதாக சொல்கிறார் என்றால் வாங்கவில்லை. 8.1.2018 நான் கிரையம் செய்ததாக சொல்லப்படும் தேதியில் முழுத்தொகையும் செலுத்தபட்டுவிட்டது என்பதற்கு 1 முதல் 4பிரதிவாதிகளிடமிருந்து அவர்கள் முகவர்கள் என்பதால் ரசீது ஏதேனும் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை காசோலையே ரசீது. 2ஆம் பிரதிவாதியிடம் கொடுத்த பணத்தை என்னிடம் அவர் திருப்பிகொடுத்துவிட்டார் என்றும் அதனால் அவர் பணம்

வாங்காமல் கையெழுத்துபோட்டுகொடுத்தார் என்றால் சரியல்ல. நான் 2ஆம் பிரதிவாதியிடமிருந்து பணம் கொடுக்காமலேயே கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.26 18:39:47 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.